


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.12.2025) முகாம் அலுவலகத்தில், நடிகர் பொன்வண்ணன் – நடிகை திருமதி சரண்யா தம்பதியினர் சந்தித்து தங்களது மகள் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்கள். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின் உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.12.2025) நாடகப்பிரியா நாடகக் குழுவின் தலைவரும் நடிகருமான எஸ்.வி. சேகர் அவர்களின் 75வது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். உடன் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன் மற்றும் எஸ்.வி. சேகர் அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.12.2025) முகாம் அலுவலகத்தில், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொருளாளர் எல்.கே. சுதீஷ் சந்தித்து, 28.12.2025 அன்று நடைபெறவுள்ள தேமுதிக நிறுவனத் தலைவர் விஜயகாந்த் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்தார். உடன் தேமுதிக தலைமை நிலையச் செயலாளர் ப. பார்த்தசாரதி உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.12.2025) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.12.2025), சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# சிறுபான்மையினர் அச்சமின்றி வாழத் துணையிருப்பதில்தான் பெரும்பான்மையினரின் பலமும் - குணமும் இருக்கிறது!

## ஜபல்பூர் – ராய்பூர் பிற இடங்களில் சிறுபான்மையினர் தாக்குதலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, டிச.27 –**

**மணிப்பூர் கலவரங்களைத் தொடர்ந்து, இப்போது ஜபல்பூர் – ராய்பூர் மற்றும் பிற இடங்களிலும் சிறுபான்மையினர் மீது தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:–**

சிறுபான்மையினர் அச்சமின்றி வாழத் துணையிருப்பதில்தான் பெரும்பான்மையினரின் பலமும் இருக்கிறது; குணமும் இருக்கிறது!

பெரும்பான்மை என்ற பெயரில் சில வலதுசாரி வன்முறைக் கும்பல்கள் தாக்குதல்களிலும் கலவரங்களிலும் ஈடுபடுவது, அதுவும் பிரதமர் அவர்கள் கிறிஸ்துமஸ் விழாவில் பங்கெடுக்கும்போதே ஈடுபடுவது, நாட்டு மக்களுக்குத் தவறான செய்தியையே கொண்டு சேர்க்கும்.

மணிப்பூர் கலவரங்களைத் தொடர்ந்து, இப்போது ஜபல்பூர் - ராய்பூர் மற்றும் பிற இடங்களிலும் சிறுபான்மையினர் மீது தாக்குதல் என்பதை நல்லிணக்கத்தை விரும்பும் நாட்டு மக்கள் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒன்றிய பா.ஜ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு, சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புப் பேச்சுகள் 74% அதிகரித்திருப்பதாகச் சொல்லப்படும் புள்ளிவிவரங்கள், எதிர்காலம் எதிர்நோக்கியுள்ள ஆபத்துகளை உணர்த்துகிறது.

எனவே, நாட்டு மக்களைப் பிளவுபடுத்திக் குளிர்காய நினைக்கும் கலவரக் கும்பல்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கிட வேண்டியது நம் அனைவரது பொறுப்பும் கடமையுமாகும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.



ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி முன்னிலையில் ஈரோடு மாநகராட்சி 27வது வார்டு அ.தி.மு.க. துணை செயலாளர் சி.குமார் தி.மு.க.வில் இணைந்தார். அதுபோது கோட்டை பகுதி செயலாளர் பொ.இராமச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் மகாலிங்கம், கழக வழக்கறிஞர் அணி துணைச் செயலாளர் மா.சு.ராதாகிருஷ்ணன், 27 வது வட்டக் கழக நிர்வாகிகள் எம்.தங்கவேல், எம்.பாலன், அழகர்சாமி, பாலசுப்பிரமணியம், செபாஸ்டின், சுகுமார், ராமநாதன், சுல்தான், மீரான்மைதின், ஜன்னத்து நிஷா, ரங்கதுரை, தங்கதுரை, வெள்ளியங்கிரி, உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## நாமக்கல் கிழக்கு மாவட்ட சட்டமன்றத் தொகுதி வாரியாக

# “வெல்லும் தமிழ்ப் பெண்கள்“ தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு குறித்த ஆலோசனைக் கூட்டம்!

## கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. அறிக்கை!

நாமக்கல், டிச. 27 –

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என் இராஜேஷ்குமார் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் வரும் 29ஆம் தேதி மாலை 4 மணிக்கு நடைபெற உள்ள வெல்லும் தமிழ் பெண்கள் மாநாட்டில் நாமக்கல் கிழக்கு மாவட்டத்தின் சார்பாக மகளிர் அணியினர் கலந்து கொள்வது குறித்து சட்டமன்ற தொகுதி வாரியாக



ஆலோசனை கூட்டம் இன்று (27 ஆம் தேதி சனிக்கிழமை) நடைபெற உள்ளது.

இராசிபுரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் காலை 9 மணிக்கும், சேந்தமங்கலம் ஒன்றிய கழக செயலாளர் அ.அசோக்குமார் இல்லத்தில் காலை 10:30 மணிக்கும், நாமக்கல் மாவட்ட கழக அலுவலகத்தில் நண்பகல் 12:30 மணிக்கும் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், தமிழ்நாடு பழங்குடியினர் நலவாரிய தலைவர் கனிமொழி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், தொகுதி பொறுப்பாளர்கள், மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தொகுதி துணைப் பொறுப்பாளர்கள், ஊராட்சி பொறுப்பாளர்கள், தொகுதி பொறுப்பாளர்களால் நியமிக்கப்பட்ட பேருந்து பொறுப்பாளர்கள் என அந்தந்த தொகுதிக்கு உட்பட்டவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## ‘ தென்னிந்தியாவின் மான்செஸ்டர்’ கோவை – ‘கோயில் நகரம்’ மதுரைக்கு

# மெட்ரோ ரயில் திட்டங்களை ஒன்றிய அரசு நிறுத்துவதா?

## மாநிலங்களவையில் – கணபதி ப.ராஜ்குமார் கண்டனம்!

கோவை, டிச. 27 –

தென்னிந்தியாவின் மான் செஸ்டர்’ கோவை ‘கோயில் நகரம்’ மதுரைக்கு மெட்ரோ ரயில் திட்டங் களை நிறுத்தியது கண்டனத்துக்குரியது என்று முனைவர் கணபதி ப.ராஜ்குமார் எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

தென்னிந்தியாவின் மான் செஸ்டர் ஆஃப் தென்னிந்தியாவின் கோயம்புத்தூர்’ ‘கோயில் நகரம்’ மதுரை ஆகிய மெட்ரோ ரயில் திட்டங் களை செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையை தமிழ்நாடு அரசு, சென்னை மெட்ரோ ரயில் கழகம் மூலம் பிப்ரவரி, 2014 இல் வீட்டுவ



சதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்திடம் சமர்ப்பித்தது.

மதுரையில், திரு மங்கலம் ஒத்தக்கடை இடையே, 31.93 கி.மீ., தூரத்திற்கு, 11,360 கோடி ரூபாயிலும், கோவையில், அவிநாசி ரோடு முதல் கருமத்தம்பட்டி வரையிலும், உக்கிடம் முதல், சத்தியமங்கலம் ரோட்டில், வலியம்பாளையம் வரை, 39 கி.மீ., தூரத்துக்கு, 740 கோடி ரூபாய் செலவிலும், 10,740 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் அனுமதி விரை வில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில், ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி அதிகாரிகள் மதுரை மற்றும் கோயம்புத்தூரில் மெட்ரோ ரயில் திட்டங் களை விரைந்து செயல்படுத்துவதற்கான ஆய்வை முடித்துள்ளனர்.

10 மாதங்களுக்கு முன்பு தமிழ்நாடு அரசால் சமர்ப்பிக்கப்பட்டது. இந்நிலையில், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி போதிய மக்கள் தொகை இல்லை எனக் கூறி மேற்கண்ட இரண்டு மெட்ரோ ரயில் திட்டங் களின் திட்ட அறிக்கைகளை தமிழ்நாடு அரசிடம் திருப்பி அனுப்பிய மத்திய அமைச்சகம், 2017 விதிகளின்படி 20 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்களில் மட்டுமே மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படும். உத்தரபிரதேசத்தில் கான்பூர், ஆக்ரா, மகாராஷ்டிராவின் நாக்பூர் உள்ளிட்ட நகரங்களில் 2 மில்லிய னுக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ‘தென்னிந்தியாவின் மான்செஸ்டர்’ கோவை, கோயில் நகரம் மதுரை எதிர்கால வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்று கூறினார்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் ஒன்றிய அரசின் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும், சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும், அதற்கு துணை நின்று மக்களை வஞ்சிக்கும் அதிமுகவையும் கண்டித்து சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் கலந்து கொண்டு கண்டன முழகங்களை எழுப்பி உரையாற்றினார். இதில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.




100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் மொடக்குறிச்சி ஒன்றியம் கஸ்பாபேட்டையில் ஒன்றிய கழக செயலாளர் சு.குணசேகரன் தலைமையில் கழக துணை பொது செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் ப.செல்வராசு கண்டன உரை நிகழ்த்தினார். ஆர்ப்பாட்டத்தில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் 100 நாள் வேலை பயனாளிகள், பெண்கள் பலர் கலந்து கொண்டனர்.